**தலைப்பு 103 – பாதுகாப்பு அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று, வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் 3.1.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட வருமானம் குறியீட்டிற்குரிய வருமானக் கணக்கு என்பன பாதுகாப்பு அமைச்சால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின், வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 103 – பாதுகாப்பு அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை செயலாளருக்கு காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும். கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால்

பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பாதுகாப்பு அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.15 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்புக்களில் பொழிப்பாக்கி தரப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார்கள் என்பது அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை. | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 127(1) (அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்படாமை | 2.1.1 |
| | | 2. பெறுகை நடவடிக்கை போதியளவில் திட்டமிடப்படாமை | 2.3.1 |
| | | 3. பதிவேடுகளையும் ஏடுகளையும் பேணாமை | 2.1.3 |
| 127(1) (ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 1. தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வு பந்திகள் | 2.7 |
| | | 2. மனித வள முகாமைத்துவத்தில் குறைபாடுகள் | 2.14 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு | 1. செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் | 2.1.2 |
| | | 2. உள்நாட்டு நிதி செயற்திட்டங்களின் செயலாற்றல் | 2.2 (அ) |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையிலும் அமைச்சின் பரிசீலனைக்கு உட்படுத்தல். | 3. | பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்துவதில் குறைபாடுகள | 2.3.2 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | 1. | சொத்துக்களை பதிவேட்டில் பதிதல் | 2.4(ஆ) |
| | | 2. | வாகனங்களை பயன்படுத்துவதில் குறைபாடுகள் | 2.4(உ) |
| | | 3. | நிதி மற்றும் செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் வாகனங்களைப் பயன்படுத்துவிலுள்ள குறைபாடுகள் | 2.4(ஈ) |
| | | 4. | பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துகள் | 2.4(ஊ) |
| 127(4) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும். | 1. | வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்காமை | 2.1.3 |
| | | 2. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றிலுள்ள குறைபாடுகள் | 2.5(அ) |
| | | 3. | அங்கீகரித்த எல்லைகளை மிகைத்து பொறுப்புக்களை மேற்கொள்ளல். | 2.5(ஆ) |
| | | 4. | பொது வைப்புக் கணக்குகளிலுள்ள குறைபாடுகள் | 2.11 |
| | | 5. | வங்கி கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள். | 2.12 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும். | 1. | வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தாமை | 2.8(அ) |
| | | 2. | மிகை நிதி ஏற்பாடுகள் வழங்கல் | 2.8(ஆ) |
| | | 3. | நிதிப்பிரமாணம் 66 மாற்றங்களைப் பயன்படுத்தாமை | 2.8(இ) |
| | | 4. | நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தாது வேறு செலவுகளுக்கு மாற்றுதல் | 2.8(ஈ) |
| | | 5. | ஏனைய அமைச்சுக்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல் | 2.8(உ) |

| | | | | |
|---|---|---|---|---|
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பிற்கு வெளியே காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை கூடுதல் கவனத்துடன் செயற்பாட்டு அமைச்சின் பரிசோதனைக்கு உட்படுத்துதல் | 1. | வருமானக் கணக்குகளிலுள்ள குறைபாடுகள் | 2.9 |
| | | 2. | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளில் குறிப்பிட்ட குறைபாடுகள் | 2.10 |
| 127(7) | உத்தியோகத்தர்கள் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந் நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் /ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்களை விதிப்பதனை கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைப் பொறுப்பாகும | 1. | நட்டங்களும் சேதங்களும் | 2.6 |
| | | 2. | நிதி சம்பந்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்கள் பெற்றுக்கொள்ளாமை | 2.15 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டு அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டிய 14 பிரதான செயற்பணிகள் காணப்பட்டதுடன் அமைச்சின் கீழ் தோற்றுவிக்கப்பட்டுள்ள 14 நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் 01 நிதியத்தால் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடைந்து கொள்வதற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

இது சம்பந்தமாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான நாளது வரையாக்கப்பட்ட அமைச்சின் தாபனக் கட்டமைப்பு, அங்கீகரித்த பதவியணியினர், தற்பொழுது சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணியினர் என்பன தொடர்பான விபரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க சிவில் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் மீளாய்வாண்டிற்காகத் திட்டமிடப்பட வேண்டிய செயற்பாடுகளான பாதுகாப்பு உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல் தொடர்பாக சட்டரீதியான கட்டமைப்பினைத் தயாரித்தல், 1998 இன் 45 ஆம் இலக்க தனியார் பாதுகாப்பு முகவர்களை ஒழுங்குபடுத்துதல் அதிகாரச் சட்டத்தை திருத்தம் செய்து அதன் கீழ் சுய பாதுகாப்புச் சேவைகளை பேணிவருகின்ற நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கு தேவையான ஒழுங்கு விதிகளைத் தயாரித்தல் மற்றும் 1996 இன் 22 ஆம் இலக்க துவக்குகள் (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்டணங்களைத் திருத்துதல் ஆகிய செயற்பாடுகள் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சின் சிவில் பாதுகாப்பு பிரிவு, பாதுகாப்பு தலைமையகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம், தந்திரோபாய வழிகளை அபிவிருத்தி செய்தல் செயற்திட்டம், ரணவிரு அரை வீடமைப்பு செயற்திட்டம், தேசிய கடற் படையணிக்குரிய மீளாய்வாண்டு தொடர்பான வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயற்பாடுகள், திட்டங்கள், அமுலப்படுத்தப்பட வேண்டிய கால அட்டவணைகள், அச் செயற்பாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகள் / விளைவுகள் என்பன செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) அமைச்சின் 06 பிரிவுகளால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளுக்குரிய பாதீட்டு மதிப்பீடும் நிதி இலக்குகளும் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அமைச்சின் கீழுள்ள நியதிச்சட்ட நிதியமான நமக்காக நாம் நிதியத்தின் கீழுள்ள செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

2.1.2 **செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை**

**செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

இது சம்பந்தமான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) தந்திரோபாய வழியிலான பாதுகாப்பு தொடர்பாடல் வலையமைப்பு செயற்திட்டம்**

முப்படைகளுக்கிடையே வலயத்திற்குள் காணப்படுகின்ற தொடர்பாடல் முறைமைக்குச் சமனான வகையில் தொடர்ச்சியாக பாதுகாப்பான மற்றும் மாற்று தொடர்பாடல் வலையமைப்பை வழங்கும் குறிக்கோளுடன் தெரிவு செய்யப்பட்ட நாட்டிலுள்ள 22 நிலையங்களில் 22 சுய ஆதார தொடர்பாடல் கோபுரங்களை நிர்மாணித்தல் 22 மின் பிறப்பாக்கி இயந்திரங்களை வழங்கி பொருத்துதல் 37 நுண்பாக அலைவரிசை தொடர்புகள், வலையமைப்பு முகாமைத்துவ முறைமைகளை உள்ளடக்கிய பொது தொடர்பாடல் கட்டமைப்பு வசதியைத் தோற்றுவித்தல் ஆகிய நடவடிக்கைகளை இதன் கீழ் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

இது சம்பந்தமான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

(i) பெறுகைக் குழுக் கூட்டங்களை பிற்போடுவதற்கு ஏற்பட்டமை சிவில் விமான சேவை அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகிய நிறுவனங்களிடமிருந்து கோபுரங்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டிய நிலையங்களுக்குரிய விசேட அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதிலுள்ள தாமதம், மின் பிறப்பாக்கி இயந்திரங்களுக்கு காப்பு கூடாரங்கள் நிர்மாணிக்கும் நடவடிக்கை தாமதமடைதல், ஒலி பரப்பு முறைமையின் பெறுகை நடவடிக்கைகளை மீண்டும் கோருவதற்கு இடம் பெற்றிருந்தமை ஆகிய சிக்கல்கள் செயற்திட்ட செயலாற்றல் கீழ் மட்டத்தில் காணப்படுவதற்கு காரணம் என செயல் முன்னேற்ற அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்தது.

(ii) 2013 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட ரூபா 1,192 மில்லியன் செயற்திட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான மத்திய கால செலவு கட்டமைப்பின் கீழ் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 60 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட காலம் இரண்டு சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டிருந்தது.

(iii) ரூபா 865.8 மில்லியன் கிரய மதிப்பீடான 37 நுண்பாக அலைவரிசை ஒலி பரப்பு இணைப்புக்களுடனான வலையமைப்பு முகாமைத்துவ முறைமையை வழங்கும் பெறுகை நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதுகாப்பு படை தலைமையகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம்**

பிரதான கட்டிடத் தொகுதி, தொடர்பாடல் கட்டிடம், பாதுகாப்புக் கட்டிடம், கழிவகற்றல் முறைமை, நீர்பம்பி என்பன I ஆம் கட்டிடத்தின் கீழும் 500 முப்படை உத்தியோகத்தர்கள் மற்றும் வதிவிட ஏனைய 6,100 உத்தியோகத்தர்களுக்காக உயவுச்சாலை மற்றும் ஏனைய வெளிப்பிரிவுகளை உள்ளடக்கிய நிரந்தர விதிவிடங்களை வழங்குதல் கட்டம் II இன் கீழ் முன்னுரிமை அடிப்படையில் அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கான திருத்திய

மொத்த கிரய மதிப்பீடு ரூபா 55,602.92 மில்லியனாக இருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட மொத்த செயற்திட்ட செலவு ரூபா 19,004 மில்லியனாகும்.

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 02 ஆண்டுகளின் பாதீட்டு நிதி ஏற்பாட்டின் பயன்பாடு கீழ் மட்டத்தில் காணப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| ஆண்டு | நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| 2015 | 7,980 | 1,763 | 6,217 | 22.04 |
| 2016 | 5,996 | 2,893 | 3,103 | 48.04 |
| 2017 | 3,922 | 2,084 | 1,838 | 53.16 |

(ii) பரீட்சிக்கப்பட்ட 18 ஒப்பந்த செயற்பாடுகளின் மாதிரிகள் தொடர்பான பெறுகை நடவடிக்கைகளில் மற்றும் வழங்கல்கள், பொருத்துதல்கள் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள தாமதங்கள் காரணமாக மீளாய்வாண்டில் எதிர்பார்க்கப்பட்ட நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்களை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. அந்த தாமதமடைதல் 206 நாட்களிலிருந்து 922 நாட்கள் வரையான கால வீச்சில் காணப்பட்டது.

(iii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஒப்பந்தக்காரரால் கால நீடிப்பு கிரய அதிகரிப்புக்களுக்காக ரூபா 486.64 மில்லியன் மேலதிக வேண்டுதல்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

(iv) இலங்கை இராணுவப் படையின் தலைமை அலுவலக கட்டிடத்தை காலி முகத்திடல் பிரதேசத்திலிருந்து அகற்றியதன் பின்னர் அக்கட்டிடத்தில் அமைந்திருந்த இலங்கை இராணுவத்தின் பல்வேறு அலுவலகங்கள் கொழும்பு நகரம் மற்றும் அண்மையிலுள்ள பிரதேசங்களில் அமைந்துள்ள அரசாங்க மற்றும் தனியார் துறைகளுக்குரிய கட்டிடங்களில் தோற்றுவிக்கப்பட்டிருந்தன. அக்காரணங்களால் 2007 திசெம்பர் 31 வரை 10 இடங்களில் 55,036 சதுர அடி கட்டிட நிலப்பரப்பு வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1,293 மில்லியன் வாடகைச் செலவை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

(v) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஒழுங்கு விதிகளைக் கவனத்தில் கொள்ளாமல் போட்டியான கேள்விகள் கோரப்படாது அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2011 ஆம் ஆண்டிலிருந்து கட்டிடக்கலை ஆலோசனை நடவடிக்களை மேற்கொண்ட தனியார் கம்பனியின் பலவீனமான செயலாற்றலின் காரணமாக அமைச்சரவையினால் 2016 யூன் 29 ஆந் திகதி சேவை முடிவுறுத்தப்பட்டிருந்தது. உரிய கம்பனியுடன் எழுத்து மூல உடன்படிக்கை செய்து கொள்ளப்படாதிருந்ததுடன் பின்னர் நியமிக்கப்பட்ட குழு அறிக்கையின் மூலம் மீளப் பெற்றுக்கொள்வதற்கு சிபார்சு செய்யப்பட்ட ரூபா 158.30 மில்லியன் பணம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் அச்செயற்பாடும் செயற்திட்டத்தின் பொறியியல் ஆலோசகரான மத்திய பொறியியல்

ஆலோசனைப் பணியகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vi) பொறியியல் ஆலோசனை சேவைக்காக மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்தால் ரூபா 1,556 மில்லியன் ஒப்பந்த பெறுமதிக்கு 2011 ஆம் ஆண்டிலிருந்து 05 ஆண்டுகள் காலத்திற்காக 2014 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை செய்து கொண்டிருந்ததுடன் 2016 ஒக்தோபர் 30 ஆந் திகதி உடன்படிக்கை காலம் முடிவடைந்திருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் உடன்படிக்கை காலம் நீடிக்கப்படாது ஆலோசனை சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அத்திகதியில் உள்ளவாறு செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக செயலாற்றல் 39 சதவீதமாக இருந்தும் ஆலோசனைக் கட்டணத்தில் ரூபா 1,136.57 மில்லியன் அல்லது 73 சதவீதம் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது.

(vii) 06 மற்றும் 07 ஆம் இலக்க கட்டிடங்களில் அலுமினியம் யன்னல் முறைமையை நிர்மாணித்து, வழங்கி பொருத்தும் உடன்படிக்கையில் பூட்டுக்களின் தயாரிப்பு கோளாறு காரணமாக யன்னல் பூட்டுக்கள் உடைந்து போனமை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சரி செய்யப்பட்டிருக்கவில்லை. 2016 சனவரி மாதத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 06 மற்றும் 07 ஆம் இலக்க கட்டிடங்களின் மின்சார படிகட்டு முறைமையின் ஒப்பந்தம் பூர்த்திசெய்யப்படாதிருந்ததுடன் 2014 திசெம்பர் 03 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த 08 ஆம் இலக்க கட்டிடத்தின் மின்சார படிக்கட்டு முறைமையைப் பொருத்தும் நடவடிக்கையானது ஆரம்பக் கட்டத்திலேயே காணப்பட்டது.

(viii) கட்டிடங்களுக்கு மத்திய அளவு வோல்ட்யிலான மின்சாரத்தை பகிர்ந்தளிக்கும் முறைமை சம்பந்தமான ஒப்பந்த நடவடிக்கைகள் தொடர்பான தாமதத்தின் காரணமாக உபகரணங்களின் உத்தரவாத காலத்தை நீடிப்பதற்கு ரூபா 38.12 மில்லியன் மேலதிக நிதிப் பொறுப்பு உருவாகியிருந்தது.

(ix) 2014 ஒக்தோபர் 27 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்ட 2015 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 06 மற்றும் 07 ஆம் இலக்க கட்டிடங்களில் பாதுகாப்பு முறைமையைப் பொருத்தும் ஒப்பந்தத்தின் செயல் முன்னேற்றம் கீழ் மட்டத்தில் காணப்பட்டது. உட்கூரை நிர்மாணித்தல் பொதுப் பிரதேசங்களில் டயில் பதித்தல், குளியலறை / மலசல கூடங்களில் டயில் பதித்தல், துணைக்கருவிகளைப் பொருந்துதல், வடிவமைப்புக்களுடன் மரத்திலான கூரை முதலிய பிரதான பெறுகை செயற்பாடுகளின் மதிப்பீட்டு தொழில்நுட்ப மாதிரிகளைத் தயாரித்தல், வேண்டுகோளின் அடிப்படையில் மீண்டும் கோருதல், பெறுகை அங்கீகாரத்தினை வழங்குவதில் தாமதங்கள் என்பவற்றின் காரணமாக இயந்திர, பொறியியல், நீர் மற்றும் தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகளின் செயல் முன்னேற்றம் அரைகுறையாகக் காணப்பட்டது. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக செயல்முன்னேற்றம் 47 சதவீதமாக இருந்தது.

**(இ) ஆள் அடையாள செயலகக் கட்டிடம் பத்தரமுல்லை**

பத்தரமுல்லை ஆள் அடையாள செயலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2012 ஆம் ஆண்டின் போது பாதுகாப்பு அமைச்சால் தேசிய நிதி மூலகங்களிலிருந்து ரூபா 7,550 மில்லியன் கடன் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. பயன்படுத்தப்பட்ட கடன் பணமாகிய ரூபா 7,512.25 மில்லியனும் மூலதனமாக்கப்பட்ட வட்டியாகிய ரூபா 1,272.37 மில்லியனையும் உள்ளடக்கி 2017 யூலை 14 ஆந் திகதி வரை வங்கியின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட

பணம் ரூபா 8,784.62 மில்லியனாகும். இக்கடன் பணம் 2030 ஆகஸ்ட் வரை அரையாண்டு தவணைப் பணம் மூலம் தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்கப்பட வேண்டிய கடன் மீதியாக ரூபா 7,395.95 மில்லியன் தொகை ஒதுக்கீட்டுக் கணக்கில் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

.

(i) பாதீட்டு நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் கடனையும் வட்டியையும் செலுத்துவதற்கு நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் உள்நாட்டு கடனைப் பெற்றுக்கொள்வதற்குரிய அங்கீகரிக்கப்பட்ட செலவு விடய குறியீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக ரூபா 949.70 மில்லியன் தொகையான வட்டிக் கொடுப்பனவுகள், செலவு விடயம் 1,601 இன் கீழும் ரூபா 563.32 மில்லியன் கடன் தவணைப் பணக் கொடுப்பனவுகள், செலவு விடயம் 3001 இன் கீழும் காட்டப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாட்டைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் கணக்குகளை வைத்திருப்பதற்காக 1409 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் வட்டியை செலுத்துவதற்கும் 2104 ஆம் விடய இலக்கத்தின் கீழ் கடன் தவணைப் பணத்தைச் செலுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) தொடக்க கடன் பணமாகிய ரூபா 7,550 மில்லியனை அரசாங்க கடன் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு 2017 மார்ச் 28 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளச் செலுத்தும் சலுகைக் காலத்துக்குள் மூலதனமாக்கப்பட்ட ரூபா 1,272.37 மில்லியன் தொகையான கடன் வட்டியை செம்மையாக்குவது சம்பந்தமாக கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) 2015 ஆகஸ்ட் மாதத்திலிருந்து வட்டி செலுத்தப்பட்டு வந்ததுடன் 2016 சனவரி மாத்திலிருந்து 2017 திசெம்பர் 31 வரை கணிக்கப்பட்ட சராசரி நிறையூட்டப்பட்ட கடன் பெறும் விகிதம் 8.9 சதவீதமாக இருந்த போதிலும் உள்ளபடியான வட்டி விகிதம் 8.5 சதவீதத்திலிருந்து 13.12 வரையான வீச்சில் காணப்பட்டது.

(iv) 2016 ஆம் ஆண்டிலிருந்து 06 அரசாங்க நிறுவனங்களுக்கு வாடகை உடன்படிக்கைகளின்றி வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மேற்கூறிய 02 நிறவனங்களால் முறையான அங்கீகாரமின்றி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த மின்சார வழங்கலின் காரணமாக மாடிகளின் தரவு முறைமைக்கு மற்றும் தோற்றுவிக்கப்பட்டுள்ள மின்சார முறைமைக்கு பாதிப்பு நிலைமை ஏற்படும் ஆபத்தினை உரிய மின்சாரம் வழங்கும் ஒப்பந்தக் கம்பனி அமைச்சுக்கு தெரியப்படுத்தியிருந்தது.

(v) கட்டிடத்தின் திட்டங்களும் உருவாக்கமும், தொடக்க பொறியியல் செயற்பாடு என்பவற்றிக்காக ரூபா 417.66 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அத்திட்டங்கள் மற்றும் கதவுத் திறப்புக்கள் முதலியன ஆலோசனை பொறியியல் நிறுவனத்தினால் முறையாக ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறுப்பேற்று கட்டிடத்தின் தற்போதைய பராமரிப்பு பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.1.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய செயலாற்றல் அறிக்கையானது 2018 யூலை 17 ஆந் திகதியே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

## 2.2 அமுல்ப்படுத்தப்பட்டிருந்த உள்நாட்டு உதவிச் செயற்திட்டம்

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் உள்நாட்டு நிதியைப் பயன்படுத்தி அமுல்ப்படுத்தப்பட்ட 05 செயற்திட்டங்களுக்காக ரூபா 600.62 மில்லியன் கூட்டு மொத்த நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 238.00 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 362.62 மில்லியன் அல்லது வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 60 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துவதற்காக போதியளவில் கட்டுநிதி கிடைக்காமையிள் காரணமாக இராணுவப் படையின் மத்திய வெடிபொருள் களஞ்சியத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம் மற்றும் தேசிய சயிபர் பாதுகாப்பு முறைமையை ஸ்தாபிக்கும் செயற்திட்ட நடவடிக்கைகளின் நிதி ஏற்பாட்டின் பயன்பாடு குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் மானிடவியலாளர்களை ஆராய்ந்து பார்த்தல் மற்றும் இயலளவு அபிவிருத்தி செயற்திட்டத்தின் பெறுகை நடவடிக்கைகளின் தாமதம் காரணமாக முறையே ரூபா 175.19 மில்லியன், ரூபா 1.76 மில்லியன் மற்றும் ரூபா 28.26 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) ஹெந்தல இராணுவ வீரர்கள் வளங்கள் கேந்திர நிலையத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்கு மீளாய்வாண்டிற்காக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் ரூபா 13.12 மில்லியன் மாற்றம் செய்யப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றில் ரூபா 9.82 மில்லியன் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவு செய்யப்பட்டிருந்தாக அறிக்கையிடப்பட்டிருந்தும் ரூபா 7.36 மில்லியன் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 2.3 பெறுகை நடைமுறைகளின் மூலம் வளங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்.

அமைச்சினால் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 10,154.73 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 5,906.36 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 2.3.1 பெறுகைகளைத் திட்டமிடல்

பெறுகைத் திட்டங்களைத் தயாரிக்காது இராணுவ வீரர் அரை வீட்டுச் செயற்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 400 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா 374.79 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 வழிகாட்டிக்கான 33 ஆம் இலக்க மேலதிகத்தின் பிரகாரம் சந்தை விலை ஒப்பீட்டு முறைமையை பின்பற்றும் போது அமைச்சரவை பெறுகைக்குழு அங்கீகரித்த அதிகார எல்லையை மிகைத்து அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த 03 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

### 2.3.2 பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்துதல்

**(அ) 2017 ஆம் ஆண்டிற்காக முப்படைகளுக்கு தேங்காய்கள் கொள்வனவு செய்தல்**

2017 ஆம் ஆண்டிற்காக இலங்கை இராணுவப் படையின் 92 முகாம்கள், இலங்கை கடற்படையின் 19 முகாம்கள் மற்றும் இலங்கை விமானப் படையின் 25 முகாம்களுக்கு வருடாந்த தேங்காய்களைத் தீர்மானிக்கும் போது இராணுவ முகாம்களில் அமைந்துள்ள தென்னைப் பயிர்செய்கைகளுடனான காணியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தேங்காய்

விளைச்சல் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அப்பெறுகைகளின் போது ஒரு கிலோ கிராமின் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட விலையை ரூபா 65 ஆக அதிகரித்தல் 2017 யூன் 16 ஆந் திகதி பாதுகாப்பு அமைச்சு செயலாளரால் தீர்மானிக்கப்பட்டதன் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேங்காய்க்காக உடன்படிக்கை செய்த விலையை மிகைத்து ரூபா 171.73 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இந்த விலை அதிகரிப்பிற்காக 2017 ஆம் ஆண்டின் போது 2018 ஆம் ஆண்டிற்கான உணவுப் பெறுகைக்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிரந்தர பெறுகைக் குழுவால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை இராணுவப் படையின் தேவைக்காக கறுப்பு நிற உயரமான 75,000 கோடி சப்பாத்துக்களை கொள்வனவு செய்தல்.**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை இராணுவப் படைக்கு கறுப்பு நிற உயரமான 75,000 கோடி சப்பாத்துக்களை கொள்வனவு செய்வதற்கான அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழுவினால் 2016 ஆம் ஆண்டின் போது சர்வதேச போட்டி அடிப்படையில் கேள்வி கோரி கேள்விதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட தெரிவுகளானது மாதிரிகளுக்கு இணங்கியிருக்காமையின் காரணமாக இரத்துச் செய்யப்பட்டிருந்தது. மீண்டும் 2017 ஆண்டின் போது சர்வதேச போட்டி அடிப்படையில் கேள்வி கோரி பெறுகைக் குழு அங்கீகரிக்கப்பட்ட இரண்டாவது ஆகக் குறைந்த விலை குறிப்பிட்ட கேள்விதாரர்களுக்குப் பதிலாக மேன்முறையீட்டுச் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் ஆகக் குறைந்த விலை குறிப்பிட்ட கேள்விதாரருக்கு ரூபா 201.75 மில்லியனான (பெறுமதி சேர் வரியின்றி) ஒப்பந்தம் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ii) பெறுகை சம்பந்தமாக கேள்விகள் கோரியதன் பின்னர் கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டதான ஒப்பீட்டு ரீதியான கேள்விதரர்களுக்கு சாதகம் அளிக்கு வகையில் இலகுபடுத்தி திருத்தம் செய்யப்பட்டிருந்தமை, தேவையான அளவு சப்பாத்துக்களை தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமான வகையில் வழங்குனர்களின் உற்பத்தி அறிக்கை, உற்பத்தி இயலளவிற்கான மதிப்பீட்டு வரையறைகளுக்கு முன்னுரிமை வழங்கியிருக்காமை ஆகிய குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களால் 2017 சனவரி 25 ஆந் திகதிக்கு முன்னர் இக்கம்பனி சப்பாத்து உற்பத்தி மற்றும் இது தொடர்பான வேறு ஏதும் செயற்பாடுகளில் தொடர்புபட்டிருக்காமை, ஆகக் குறைந்த விலையை சமர்ப்பித்த கேள்விதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகள் உரிய பரிசோதனைகளில் வெற்றிபெறாதிருந்தும் மீண்டும் பரீசீலினைகளுக்காக ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டமை, மேன்முறையீடுகளின் போது பெறுகைக் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரருக்கு விளக்கமளிப்பதற்கு சமமான சந்தர்ப்பம் கிடைத்திருக்காமை ஆகிய குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(இ) முப்படைகளுக்கான உணவுப் பொருள் பெறுகைகள்**

---

மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட 2018 ஆம் ஆண்டிற்கான முப்படைகளுக்கு உணவுப் பொருட்களை வழங்குவது சம்பந்தமான பெறுகை நடைமுறைகளில் 2018 ஆம் ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 10,083 கேள்விகளில் இராணுவப் படைக்கான 148 கேள்விகளும் விமானப்படைக்கான 381 கேள்விகளும் கடற்படைக்கான 513 கேள்விகளுமாக 1,042 கேள்விகளின் தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) பெறுகை நடைமுறை 2017 ஏப்ரல் 21 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 சனவரியிலிருந்து அமுல்ப்படுத்துவதற்கு இயலுமான வகையில் பெறுகை நடைமுறை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை உணவு விநியோகித்தல் வழங்கப்பட்ட ஒப்பந்த பெறுமதி படிப்படியாகக் குறைவடைந்திருந்தும் 2018 ஆம் ஆண்டிற்கான உத்தேச பெறுகை ஒப்பந்த பெறுமதியானது இலங்கை இராணுவப் படைக்கு ரூபா 909 மில்லியனாலும் கடற்படைக்கு ரூபா 1,401 மில்லியனாலும் விமானப் படைக்கு ரூபா 212 மில்லியனாலும் ஆக ரூபா 2,522 மில்லியனால் அதிகரித்திருந்தது.

(ii) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்காக நியமிக்கப்பட்ட இரண்டு அங்கத்தவர்களின் நியமனங்கள் சிக்கலானது என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) பரீட்சிக்கப்பட்ட மாதிரியின் பிரகாரம் நியாயமான சந்தை விலையைத் தீர்மானிப்பதற்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ளலானது சுயாதீனமான, ஏற்றுக்கொள்ளப்பட்ட, உறுதியான அடிப்படையில் இடம்பெற்றிருக்காமை, அந்த விலையானது நடைமுறைச் சாத்தியமான அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்காமை, கேள்வி மதிப்பீட்டு நடைமுறைக்காக நியாயமான சந்தை விலையைத் தீர்மானிக்கும் போது கவனிக்கப்பட வேண்டிய சந்தை வரைகளும் அந்த விலைகள் தீர்மானிக்கப்பட வேண்டிய நடைமுறைகளும் உறுதியாகத் தயாரிக்கப்படாமை மற்றும் நியாயமான சந்தைவிலைகளை மாத்திரம் பயன்படுத்தி விலைகள் ஒப்பீட்டு செய்தமை, தீர்மானிக்கப்பட்ட நியாயமான சந்தை விலையை விட குறைந்த விலைகள் நடைமுறைச் சாத்தியமற்றவை எனக் கருதி நிராகரிக்கப்பட்டிருந்தும் சில சந்தர்ப்பங்களில் மீண்டும் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டமை, கேள்விதாரர்களால் உறுதியாக முகாம்கள் குறிப்பிடப்படாமை அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பிரதான மீறலாகக் கருதி கேள்விகள் நராகரிக்கப்பட்டமை முதலியவற்றின் காரணமாக ரூபா 69.14 மில்லியன் கூட்டு மொத்தமன சாதகமற்ற நிதித் தாக்கம் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(iv) குளிரூட்டப்பட்ட உணவு, இறைச்சி, மீன் முதலிய விரைவாகப் பழுதடையக் கூடிய உணவுகளை வழங்கும் பெறுகைளை மதிப்பீடு செய்யும் போது முரண்பாடுகள் ஏற்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டதுடன் களஞ்சியம், குளிரூட்டல் வசதிகள் என்பவற்றைப் பரீட்சிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் கணக்காய்வின் போது விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) கேள்விதாரர்களுக்கு எதிராக முன்னைய வழங்கல்கள் தொடர்பான ஏதாவது பாதகமான அறிக்கைகள் காணப்படுமாக இருந்தால் அதன் அடிப்படையில் கேள்விதாரர்களின் அனைத்து கேள்விகளுமோ அல்லது ஒரு கேள்வியோ அல்லது அதற்கு அதிகமானவையோ மதிப்பீட்டு நடைமுறையின் போது நிராகரிக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தும் கேள்விகளை மதிப்பீடு செய்த போது குறைந்த மதிப்புள்ள வழங்குனர்களின் அந்த அறிக்கை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) பாதுகாப்புச் சேவைக் கல்லூரிக்காக தளபாடங்களைக் கொள்வனவு செய்தல்

---

குருநாகல் பாதுகாப்புச் சேவைக் கல்லூரிக்காக ரூபா 9.43 மில்லியன் தொகையான தளபாடங்கள் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம பிரிவின் பிரகாரம் வழங்கல் ஒப்பந்த உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படாது கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 5.3.13 ஆம் பிரிவின் பிரகாரம் மதிப்பீட்டு நடைமுறையின்

போது பிரதான மீறலான கேள்விப் பிணைக் குறைபாடானது சிறிய மீறலாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**2.4 சொத்துகள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் விற்றுத் தீர்த்தல் / விற்றலாக அறிக்கையிடப்பட்ட ரூபா 3.16 மில்லியன் பெறுமதிக்குரிய துணைப் பேரேடு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படாமையால் அப்பெறுமதியின் சரியான தன்மையைப் பரீட்சிக்க முடியாதிருந்தது.

**(ஆ) சொத்துக்களை பதிவேட்டில் பதிதல்**

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை / கணனி, துணைக்கருவிகள், மென் பொருட்கள் என்பன தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் நிதிப்பிரமாணம் 1647 இன் பிரகாரம் வாகனப் பட்டியலை பேணுவதற்குரிய 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2007 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழான கொம்பட்ரோலர் ஜனரால் அலுவலகத்தினால் கோரப்பட்டிருந்த சொத்துக்கள் சம்பந்தமான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வாகனப் பயன்பாடு**

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை கீழே குறிப்பிடப்பட்டவாறு 86 வாகனங்கள் காணப்பட்டதுடன் அவ் வாகனங்கள் 1,188,243 கிலோ மீற்றர் தூரம் ஓடியிருந்ததுடன் அதற்காக எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணைக்காக ரூபா 13.97 மில்லியனும் வாகனங்களை சேவை செய்வதற்காக ரூபா 2.58 மில்லியனும் வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்காக ரூபா 16.09 மில்லியனும் வாகன போக்குவரத்து சேவைக்காக (காப்புறுதி) ரூபா 2.95 மில்லியனும் ஆக ரூபா 35.59 மில்லியன் மொத்த தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க, அமைச்சினால் வாகனங்களை ஓடுவதற்காக சாரதி சம்பளம் மற்றும் படிகளைத் தவிர்த்து ஒரு கிலோ மீற்றருக்கு ரூபா 29.96 செலவு செய்யப்பட்டிருந்தது.

**(ஈ) நிதி மற்றும் செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் வாகனங்களைப் பயன்படுத்துதல்**

நிதி குத்தகை முறைமையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 35.90 மில்லியன் பெறுமதியான விசேட வசதிகளுடனான 02 அதி சொகுசு பஙகஸ் வெளிநாட்டு விவகார அமைச்சினால் 2016 யூன் 08 ஆந் திகதி பாதுகாப்பு அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அந்த பஸ்கள் 2016 யூலை 14 ஆந் திகதி இலங்கை இராணுவப் படைக்கும் இலங்கை கடற் படைக்கும் வழங்கப்பட்டிருந்தன. இரண்டு அதி சொகுசு பஸ்களுக்காக ரூபா 7.75 மில்லியன் மீளச் செலுத்த வேண்டிய குத்தகை கடன் பணமும் ரூபா 0.49 மில்லியன் குத்தகை வட்டியும் கடப்பாடாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(உ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 மார்ச் 17 அந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சின் கீழ் உள்ள 02 செயற்திட்டங்கள் மற்றும் 02 நிறுவனங்களால் மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தேசிய பயிற்சிப் படையணி பயிற்சி நிலையத்தின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரன்தெம்பே ஆயுதக் களஞ்சியத்தின் 1638 துவக்குகள் சரியாக பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்காமை மற்றும் பயன்பாட்டிற்குப் பொருத்தமற்ற நிலையில் காணப்பட்ட கடற்படை, ஆகாயப் படை, மற்றும் பொலிஸ் சீருடைகளின் 17,250 அலகுகள் நீண்ட காலமாகக் காணப்பட்டன. மேலும் படைத் தலைமையத்தை உள்ளடக்கிய 13 நிலையங்களின் பொருள் பட்டோலைப் பதிவேடு முறைப்படி நாளது வரையாக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**(ஊ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

தந்திரோபாய தொடர்பாடல் வலையமைப்பு செயற்திட்டத்திற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 15.69 மில்லியனுக்கு கொள்வனவு செய்து பொருத்தப்பட்டுள்ள 10 மின்பிறப்பாக்கி இயந்திரங்களும் ரூபா 18.80 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட கூடாரங்களை நிர்மாணித்தல் பூர்த்தி செய்யப்படாது 12 மின் பிறப்பாக்கி இயந்திரங்கள் ஒலி பரப்பி நிலையங்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை விளைவற்றுக் காணப்பட்டது.

## 2.5 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**(அ) கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று**

(i) ஒதுக்கீட்டுக் கணக்கின் பொறுப்புக்கள் கூற்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 05 நிறுவனங்களுக்குரிய பொறுப்புக்களின் பெறுமதிக்கும் உரிய நிறுவனங்களின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்களின் பெறுமதிக்குமிடையே ரூபா 6.62 மில்லியன் தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ii) பாதுகாப்பு தலைமையக கட்டிடத் தொகுதியை நிர்மாணிக்கும் செயற்திட்டம் தொடர்பாக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 05 ஒப்பந்தக்காரர்களால் வேண்டிக் கொள்ளப்பட்டிருந்த 12 கால நீடிப்பு கோரிக்கைகளின் அடிப்படையில் ரூபா 486.64 மில்லியன் தொகையான மேலதிக நிதி மீளாய்வாண்டின் போது கடப்பாடுகளின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளை மிகைத்து பொறுப்புக்களை ஏற்படுத்துதல்**

நிதிப்பிரமாணம் 94 இலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது சேமிக்கப்பட்டுள்ள தேறிய நிதி ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 9.79 மில்லியன் தொகையான பொறுப்புக்களுக்கு இணக்கம் செய்யப்பட்டிருந்தது.

**2.6 நட்டங்களும் சேதங்களும்**

ஒதுக்கீட்டுக் கணக்கில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாதுகாப்பு தலைமையக நிர்மாண செயற்திட்டத்தின் கிரயத்தில் உள்ளடக்கப்பட்ட கட்டிட வளவில் 2014 பெப்ரவரி 11 ஆந் திகதி இடம்பெற்ற தீயினால் ஏற்பட்ட ரூபா 12.31 மில்லியன் நட்டம் சம்பந்தமாக எடுக்கப்பட்டுள்ள நடைமுறைகள் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.7 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

2016 யூலை 22, 23, 24 மற்றும் 2016 ஆகஸ்ட் 10 ஆந் திகதிகளில் இடம் பெற்ற அரசாங்க கணக்குகள் குழுவின் ஆலோசனையின் அடிப்படையில் முப்படைகளால் வெளிதரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் மூலம் உழைக்கப்பட்ட வருமானங்களை திரட்டு நிதியத்திற்கு செலவு வைப்பது சம்பந்தமாக உறுதியான ஒரு நடைமுறை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் அவ்வாறான ஒரு நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் அமைச்சிற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்களும் அவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களும் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | % |
| 2013 | மீண்டுவருபவை | 10,867 | 9,170 | 1,697 | 16 |
| | மூலதனம் | 18,725 | 12,507 | 6,218 | 33 |
| | **மொத்தம்** | 29,592 | 21,677 | 7,915 | 27 |
| 2014 | மீண்டுவருபவை | 5,354 | 5,314 | 40 | 1 |
| | மூலதனம் | 20,273 | 14,202 | 6,071 | 30 |
| | **மொத்தம்** | 25,627 | 19,516 | 6,111 | 24 |
| 2015 | மீண்டுவருபவை | 5,677 | 5,364 | 313 | 6 |
| | மூலதனம் | 13,820 | 9,113 | 4,707 | 34 |
| | **மொத்தம்** | 19,497 | 14,477 | 5,020 | 26 |
| 2016 | மீண்டுவருபவை | 5,936 | 5,694 | 242 | 4 |
| | மூலதனம் | 11,551 | 7,458 | 4,093 | 35 |
| | **மொத்தம்** | 17,487 | 13,152 | 4,335 | 25 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2017 | மீண்டுவருபவை | 12,273 | 8,993 | 3,280 | 27 |
| | மூலதனம் | 9,822 | 7,258 | 2,564 | 26 |
| | **மொத்தம்** | 22,095 | 16,251 | 5,844 | 26 |

**ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**(அ) வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாமை**

11 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 61.52 மில்லியன் மொத்த தேறிய நிதி ஏற்பாட்டிலிருந்து எதுவித பயன்பாடும் செய்யப்படாது முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் 27 செலவு விடயங்களுக்காக நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றம் செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 389.48 மில்லியன் தொகையும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) மிகை நிதி ஏற்பாடு வழங்குதல்**

79 செலவு விடயங்களுக்காக ரூபா 5,428.79 மில்லியன் கூட்டு மொத்தமான மிகை நிதி ஏற்பாடு வழங்கப்பட்டதன் காரணமாக அச்செலவு விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டில் ரூபா 4,983 மில்லியன் மொத்த தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக சேமிப்பானது வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 10 சதவீதத்திலிருந்து 97 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது.

**(இ) நிதிப் பிரமாணம் 66 மாற்றங்கள் பயன்படுத்தப்படாமை.**

நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் நிதி ஏற்பாடு ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றம் செய்யப்பட்ட பின்னரும் குறிப்பிடத்தக்க அளவான நிதி ஏற்பாட்டு சேமிப்புக்கள் 14 செலவு விடயங்களுக்காக ரூபா 2,159.61 மில்லியன் அளவானவையாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**(ஈ) புதிய செயற்திட்ட பிரேரனைகளுக்காக நிதி ஏற்பாட்டை வழங்குதல்.**

நிதிப் பிரமாணம் 230 இன் பிரகாரம் குறியீட்டு நிதி ஏற்பாடு வழங்கப்படாது புதிய செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 மாற்றங்கள் மற்றும் மேலதிக நிதி எற்பாட்டின் மூலம் ரூபா 206 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 125.42 மில்லியன் மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது.

**(உ) ஏனைய அமைச்சுக்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

கல்வி அமைச்சின் ரூபா 30 மில்லியன் நிதி ஏற்பாட்டில் கொழும்பு பாதுகாப்புச் சேவைக் கல்லூாயில் சூரிய சக்தி முறைமையைத் தோற்றுவிப்பதற்காக இலங்கை சூரிய சக்தி அதிகார சபையின் மூலம் 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்ட சாத்தியவள ஆய்வின் பிரகாரம் முறைமையைத் தோற்றுவிப்பதற்கு 2016 ஒக்தோபர் 11 அந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பக் கட்டத்திலேயே காணப்பட்டது.

## 2.9 மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

அமைச்சினால் 2017 ஆம் ஆண்டிற்காக வருமானக் குறியீடு 10.03.07.05 இற்காக ரூபா 21 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 29 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 138 சதவீதமாகும்.

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிலுவையாகக் காணப்பட்ட வருமானம் ரூபா 1.50 மில்லியன் கூட்டு மொத்தமாக இருந்ததுடன் ஆத 01 ஆண்டிலிருந்து 03 ஆண்டுகளுக்கிடையேயான காலப்பகுதிக்குரியதாகும். நிலுவையாகக் காணப்பட்ட வருமானங்களை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டதுடன் அரையாண்டு ரீதியான நிலுவை வருமான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 1996 இன் 22 ஆம் இலக்க துவக்குகள் (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்டணங்களைத் திருத்துவதற்காக அமைச்சருக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டவாறு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளைத் திருத்துவதற்குரிய செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) சிவில் பாதுகாப்பு பிரிவு மற்றும் மாவட்டங்களிலுள்ள உதவி வெடி பொருள் கட்டுப்பாட்டு அலுவலகங்களில் முறையே உத்தரவுப் பத்திரங்களை வழங்குதல் மற்றும் பயன்படுத்துதல் தொடர்பான 22 நடவடிக்கைகளுக்குரிய மற்றும் வெடி பொருட்கள் சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்பட்ட தரவுகளை உள்ளடக்கிய கணனி தகவல் முறைமையைப் பேணுவதற்காக மீளாய்வாண்டு வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு தொடர்பாக 10301 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | இழிவு எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 85.00 | 84.89 | 45.00 | 46.66 | 275.00 | 173.74 |

**நிலுவையாக இருந்த மீதிகளை அறவீடு செய்தல்**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணைக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத் திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் மொத்த தொகையானது இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளைத் தவிர்த்து ரூபா 4.68 மில்லியனாக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகள் ஆண்டிலிருந்து 26 ஆண்டுகள் வரையான வீச்சுடைய காலமாகக் காணப்பட்டு வருகின்ற போதிலும் அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

**2.11 பொது வைப்புக் கணக்கு**

அமைச்சின் கீழுள்ள 03 பொது வைப்புக் கணக்குகளில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 236.37 மில்லியனாக இருந்ததுடன் 6000/0000/00/0016/0063/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியில் உள்ளடக்கப்பட்ட 2 ஆண்டுகளுக்கு மிகையான ரூபா 2.30 மில்லியன் மொத்த தொகையான 08 வைப்புக்களுக்காக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.12 வங்கி கணக்குகளைச் செயற்படுத்துதல்**

அமைச்சினால் 2017 ஆம் ஆண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்ட இரண்டு வங்கி கணக்குகளில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்ட ஆனால் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 1.02 மில்லியன் மொத்த தொகையான காசோலைகளில் 06 மாதங்களை மிகைத்த ரூபா 0.56 மில்லியன் தொகையான 05 காசோலைகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.13 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | **பதிவேட்டின் வகை** | **உரிய வருமாணம்** |
|---|---|---|
| (அ) | நட்டங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (ஆ) | கடமைத் தொலைபேசில் பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) |
| (இ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |

**2.14 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**இணைத்துக்கொள்ளப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் ஆளணி வேதனம் என்பவற்றிக்கான செலவு**

(அ) அமைச்சின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரித்த, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக அமைச்சரினால் ஆளணி வேதன செலவுத் தொகுதிக்காக ரூபா 219.78 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு தனி நபருக்கான செலவு ரூபா 633,387 ஆக இருந்தது.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 63 | 51 | 12 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 10 | 04 | 06 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 252 | 167 | 85 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 155 | 121 | 34 |
| (v) | ஏனையவை (அமையம்/தற்காலிகம்/ஒப்பந்த அடிப்படை) | 04 | 04 | - |
| | **மொத்தம்** | **484** | **347** | **137** |

01 பிரதி வெடி பொருள் கட்டுப்பாட்டாளர் பதவி மற்றும் 02 மேலதிக பிரதி வெடி பொருள் கட்டுப்பாட்டாளர் பதவி வெற்றிடங்களை 2012 ஆம் ஆண்டிலிருந்து நிரப்புவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஆயுதப் படையின் அங்கத்தவர்கள் பின்வருமாறு அமைச்சின் கடமைகளுக்காக இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

| **படையணி** | **உத்தியோகத்தர்கள்** | **ஏனைய உத்தியோகத்தர்கள்** | **மொத்தம்** |
|---|---|---|---|
| இராணுவப் படை | 62 | 146 | 208 |
| கடற் படை | 6 | 47 | 53 |
| ஆகாயப் படை | 9 | 44 | 53 |
| | 77 | 237 | 314 |

அமைச்சின் பல்வேறு பதவிகளின் அரசாங்க முகாமைத்துவ சேவையின் 41 பதவிகள் சீருடைப் பதவியணியினரால் கடமைகள் நிறைவேற்றப்பட்டு காணப்பட்டன.

## 2.15 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்

அரசாங்கத்தின் நிதி சம்பந்தமாகவும் களஞ்சியத்திற்குப் பொறுப்பாகவும் கடமையாற்றுகின்ற 612 உத்தியோகத்தர்கள் அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைகள் கட்டளைச் சட்டத்திற்கும் நிதிப் பிரமாணம் 880 இற்கும் இணங்க பிணை வைக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சின் உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் இறுதி வரை பிணைகள் வைத்திருக்கவில்லை.